வளன் ஆய்வம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# குறுந்தொகை அவலப் பாடல்களில் உளவியல்

முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி -2

**ஆய்வுச்சுருக்கம்**

அகக்கருத்துக்களையும் வாழ்வியல் சிந்தனைகளையும் அழகுற எடுத்தியம்பும் அகப்பாடல்களில் ஒன்றாக சங்க இலக்கிய நூலான குறுந்தொகை திகழ்கின்றது. பூரிக்கோ அவர்களால் தொகுக்கப்பட்ட நல்ல என்னும் அடைமொழி கொண்ட குறுந்தொகை நூலானது கடவுள் வாழ்த்து உட்பட 402 பாடல்களைக் கொண்டதாகும். என்பை இன்புருகச் செய்யும் அழகுமிகு பாடல்கள் நிறைந்த தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை இலக்கியமானது உணர்வும் உணர்ச்சியும் மிகுந்த பெட்டகப் புதையலாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் எண் வகை மெய்ப்பாடுகளைச் சுகமாகச் சுமந்து வரும் குறுந்தொகை என்னும் இலக்கியச் சோலையில் பூத்துக் குலுங்கும் பல மலர்களுள் அவலம் குறித்ததான சில மலர்களை மட்டும் கட்டுரையாளர் எடுத்து விரித்து தொடுத்து மாலையாக்கி அவற்றின் வாயிலாக உளவியல் கருத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

**கலைச்சொற்கள்**

மெய்ப்பாடு, அவலம், வறுமை, அசைவு, இழிவு. இழவு, செலவு

**முன்னுரை**

பழந்தமிழரின் அரிய பண்பு நலனையும் சமூக வரலாற்றையும் காட்டும் காலப்பெட்டகமாக சங்க இலக்கியம் திகழ்கிறது. கடைச்சங்க காலத்தில் தோன்றிய தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகையானது அகச்செய்திகளை அள்ளித் தரும் நூலாகத் திகழ்கின்றது. தலைவன், தலைவி, தோழி கூற்றில் இடம்பெறும் பாடல்களில் தனிமனித எண்ணங்கள் ஏராளமாகக்

கொட்டிக் கிடக்கின்றன. எண்ணங்களைத் தரும் பாடல்களில் தொல்காப்பியர் கூறும் எண்வகை மெய்ப்பாடுகள் காணக்கிடக்கின்றன. அவற்றுள் அழுகை என்னும் அவல மெய்ப்பாட்டுப் பாடல்களுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றின் ஊடாக இருக்கும் உளவியல் காரணங்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன.

**குறுந்தொகை**

நாலடி முதல் எட்டடி வரையிலான குறுகிய பாடல்களால் ஆன இந்நூல் 205 புலவர்களால் பாடப்பட்டது ஆகும். உள்ளத்தால் சுவைத்து உவக்கத்தக்க அகச்செய்திகளைத் தாங்கியும் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற ஐந்து திணைகளைச் சுட்டியும் வரும் நல்ல என்ற அடைமொழி கொண்ட குறுந்தொகையானது சங்கப்பாடல்களில் முதலாவதாகத் தொகுக்கப்பட்ட பெருமைக்குரியது. கி.பி.2-ம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூலில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நூற்றி நாற்பத்து ஆறும், நாற்பத்து நான்கு பாடல்கள் முல்லைத்திணையிலும் மருதத்திணைப் பாடல்கள் நாற்பத்து எட்டும் நெய்தல்திணைப் பாடல்கள் எழுபதும் , பாலைத்திணைப் பாடல்கள் தொண்ணூற்று மூன்றும் காணப்படுகின்றன.

**மெய்ப்பாடு**

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”** [1]

முப்பத்து இரண்டு செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகிய மெய்ப்பாடு கர்ணனுடன் ஒட்டிப் பிறந்த கவச குண்டலம் போல மனிதன் தோன்றிய காலம் தொட்டே காணப்படுகின்றது. மெய் + பாடு எனப் பிரித்துப் பார்க்கப்படும் மெய்ப்பாடானது உள்உணர்ச்சிகளின் மெய்மை வெளிப்பாடு, உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றும் புற உடலசைவுகள், விசாரித்து உணர்தலின்றி பார்த்த உடனேயே அல்லது படித்த உடனேயே பொருள் புலனாகி உடலிலிருந்து வெளிப்படுவது என்ற பொருள் விளக்கங்கள் பெறுகிறது. இக்கருத்திற்கு அரண் சேர்த்தால் போல் **“உள்ளத்து நிகழ்ச்சியின் உடற்குறி”**[2] என நர்மதாவின் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. **”யாதானும் ஒன்றைக் கூறியவழி அதன்கண் பொருண்மையை விசாரித்து உணர்தலின்றி**

**அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்படத் தோன்ற முடிப்பது மெய்ப்பாடு என்னும் உறுப்பாம்”**[3] என இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற எட்டையும் சுட்டும் விதமாக எண்வகை மெய்ப்பாடு என தொல்காப்பியர் கூறுகின்றார்.

**மெய்ப்பாடு தோன்றுவதற்கானக் காரணங்கள்**

நகை என்னும் மெய்ப்பாடு தோன்றும் காரணங்களாக எள்ளல், இளமை, பேதமை, மடம் ஆகியவைகள் அமைகின்றன. மூப்பு, பிணி, வருத்தம், மென்மை போன்ற காரணங்களால் இளிவரல் மெய்ப்பாடும் புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய காரணங்களால் மருட்கையும் அணங்கு, விலங்கு, கள்வர், தம்இறை என்னும் காரணங்களால் அச்சம் என்ற மெய்ப்பாடும் கல்வி, தறுகன்மை, புகழ், கொடை என்னும் காரணங்களால் பெருமிதமும் உறுப்பறை, குடிகோள், அலைத்தல், கொலை என்ற காரணங்களினால் வெகுளி என்னும் மெய்ப்பாடும் செல்வம், புலன், புணர்வு, இன்ப விளையாட்டு என்னும் காரணங்களால் உவகையும் தோன்றுகின்றன. மெய்ப்பாட்டினுள் ஒன்றான அவலம் என்னும் மெய்ப்பாடு

**“ இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே”** [4]

என்னும் காரணங்களால் ஏற்படுகின்றது. அதாவது இழவு (இழப்பு), இழிவு (பிறரால் இகழப்பட்ட நிலை), அசைவு (பழைய நிலை கெட்டு வருந்துதல்), வறுமை (ஒன்றுமின்மை, போகம் துய்க்கப் பெறாமை) ஆகிய காரணங்களால் அவலம் ஏற்படுகின்றது என்று கூறலாம்.

**அவல மெய்ப்பாடு**

**“ வருந்திடக்கூடிய அல்லது இரங்கத்தக்க நிலை”** [5]

என்ற நிலையில் அமையும் அழுகையெனும் அவல மெய்ப்பாடு இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலையாமையை எடுத்துக்காட்டி வாழ்க்கையின் இலக்கைத் தெளிவுபடுத்துகின்றது. இழவு, இழிவு, அசைவு,

வறுமை என்னும் காரணங்களால் ஏற்படும் அவலமானது தானே அவலித்தல், பிறர் அவலம் கண்டு அவலித்தல் என இருவகைப்படுகிறது. தலைவியின் கூற்றுகளில் வரும் அவலப் பாடல்கள் தானே அவலித்தல் வகையைச் சார்ந்தது. தானே அவலித்தல் பிரிவில் அறுபத்து ஒன்பது பாடல்களும் பிறர் அவலம் கண்டு அவலித்தல் பிரிவில் பதின்மூன்று பாடல்களும் இடம்பெற்றுள்ளன. தலைவி கூற்று, தோழி கூற்று, தலைவன் கூற்று ஆகிய கூற்றுகளில் அவலப்பாடல்கள் குறுந்தொகையில் இடம்பெறுகின்றன.

**குறுந்தொகையில் அவல மெய்ப்பாடு**

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடுவதற்காகவோ தொழிலுக்காகவோ செல்லும்போது அப்பிரிவின் துயரம் தாங்காமலும், ஊர் மக்களால் இகழப்படும்போதும், முன்னர் உள்ள நிலை கெடும்போதும், வறுமையின் காரணமாகவும் தலைவி அவலமுறுகிறாள். வறுமை என்பதற்கு இன்பம் துய்க்க முடியாத ஆசை கொண்ட உள்ளம் அதாவது போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம் என பேராசிரியர் விளக்கம் தருகிறார்.

**"வறுமை என்பதற்குப் போகந்துய்க்கப் பெறாத பற்றுள்ளம்"** [6]

***1. யான் மட்டும் துயிலவில்லை***

" நள்ளென் றன்றே யாமம் சொல்அவிந்து
இனிதுஅடங்கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சாதானே" 7

திணை: நெய்தல் பாடியவர்: பதுமனார்

கூற்று: தலைவி தோழியிடம் கூறியது.

உரை:

நடு இரவு இருள் மிகுந்ததாக உள்ளது. மனிதர்கள் அனைவரும் பேசுவதை நிறுத்தி விட்டு இனிமையாக உறங்குகின்றனர். அகன்ற இடத்தையுடைய இவ்வுலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் வருத்தமின்றி உறங்குகின்றன. நான் ஒருத்தி மட்டும் தூங்காமல் இருக்கின்றேனே.

மெய்ப்பாடு

இழவு மற்றும் அசைவு ஆகிய இரு காரணங்களால் இப்பாடலில் அழுகை ஏற்படுகிறது. இப்பாடலில் தலைவனது பிரிவும் தலைவியின் உறக்கமின்மையும் பேசப்படுகிறது. தலைவனது பிரிவை இழப்பு என்ற காரணத்தோடும் தலைவியின் உறக்கமின்மையை அசைவு என்னும் காரணத்தோடும் பொருத்திப் பார்க்கலாம்.

உளவியல் கருத்து

தன்னுடைய மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் ஊர் மக்கள் இருக்கின்றார்களே என்ற ஆதங்கத்தில் அவர்களை மாக்கள் என்று குறிப்பிடுகிறார். தலைவனை மட்டுமே குறை சொல்லியிருக்க வேண்டும் ஆனால் அக்காலக்கட்டம் ஆணாதிக்கம் மிகுந்திருந்த காரணத்தால் ஊர் மக்கள் மேல் தலைவியின் கோபம் திரும்பிற்று.

## *2. வருந்திய நெஞ்சு*

“நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே
இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற்கு அமைந்த நம் காதலர்
அமைவு இலர் ஆகுதல் நோமென் நெஞ்சே” [8]

திணை: நெய்தல் பாடியவர்: காமஞ்சேர் குளத்தார்

கூற்று: தலைவி தோழியிடம் கூறியது.

உரை

என் நெஞ்சம் வருந்துகின்றது. என் நெஞ்சம் வருந்துகின்றது. இமைகளைச் சுடும் சூடான என் கண்ணீரைத் துடைத்து எனக்கு ஆதரவாக இருந்த நம் தலைவர் இப்பொழுது என்னுடன் பொருந்துதல் இல்லாதவராய்ப் பிரிந்திருத்தலால் என் நெஞ்சம் வருந்துகின்றது.

மெய்ப்பாடு

தலைவனது இழப்பினால் தலைவியின் நெஞ்சம் துயர் உறுகிறது என்பதைத் தோழியிடம் தலைவி கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகின்றது. இப்பாடலில் இழவு என்ற காரணத்தினால் அழுகை ஏற்படுகிறது.

உளவியல் கருத்து

தலைவனும் தலைவியும் சங்க காலத்தில் ஈருடல் ஓருயிராய் வாழ்ந்தும் ஒருவரை ஒருவர் ஆற்றுப்படுத்தியும் அன்புடனும் வாழ்ந்து வந்துள்ளனர். தலைவனின் அன்புள்ளத்தைத் தலைவியின் கூற்றிலிருந்து அறியலாம்.

### *3. கொடியோர் நாவு*

"கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
தெழுகுளிர் மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றவ்வே" [9]

திணை: முல்லை பாடியவர்: பரணர்

கூற்று: தலைவி கூற்று

உரை

இளவேனில் காலம் வந்ததால் கரிய அடிப்பக்கங்களை உடைய வேப்ப மரங்களின் ஒளி பொருந்திய பூக்கள் பூக்க ஆரம்பித்து விட்டன. என் தலைவன் வருவதற்கு முன்னரே இந்த இளவேனில் காலம் கழிந்து விடுமோ? ஆற்றங்கரையில் முளைத்து வளர்ந்த வெண்மையான கிளைகளை உடைய அத்தி மரத்திலிருந்து விழுந்த ஒரு பழத்தை ஏழு நண்டுகள் மிதித்து குழைத்ததைப் போல், இவ்வூரில் உள்ள கொடிய மகளிருடைய நாக்குகள் என் காதலர் என்னை விட்டுச் சென்றதால் அலர் கூறின.

மெய்ப்பாடு

'கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்' எனத் தொடங்கும் பரணர் பாடிய முல்லைத்திணைப் பாடலில் இழிவினாலும் அசைவினாலும் அவலம் ஏற்படுகின்றது. கார்காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் அக்காலம் வந்தப்பிறகும் வராமையினாலும் தலைவனின் பிரிவைக் காட்டிலும் கொடியோராகிய சில பெண்கள் கூறும் சொற்களால் ஏழு நண்டுகள் சேர்ந்து மிதித்த ஒரு பழம் போலத் தான் குழைந்து மிகுவருத்தம் கொண்டதாகவும் தலைவி கூறி அவலமுறுகிறாள்.

உளவியல் கருத்து

தலைவன் மேல் தலைவி கொண்டிருக்கும் உயர்ந்த எண்ணமும் நல் அபிமானமும் தெரிய வருகிறது. தலைவன் மேல் வைத்திருக்கும் உயரிய எண்ணத்தை ஊராரின் அலர் சிதைத்து விடுமோ என்ற தலைவியின் பயம் இப்பாடலில் வெளிப்படுகிறது.

### *4. எவ்வாறு அறிவிப்பேன்*

“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?

ஓரேன்! யானும் ஓர்பெற்றி மேலிட்டு
ஆ அ ஒல் எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே” [10]

திணை: பாலை பாடியவர்: ஔவையார்

கூற்று: தலைவி கூற்று

உரை

சுழலுதலை உடைய அசைந்து வருகின்ற தென்றல் காற்று வருத்த, காம நோயினாலான எனது வருத்தத்தை உணராமல் கவலையின்றித் தூங்கும் ஊரில் உள்ளவர்களை யான் முட்டுவேனா? அல்லது தாக்குவேனா? ஏதேனும் ஒன்றைக் கூறி ஆவென்றும் ஒல்லென்றும் ஒலி உண்டாக்கிக் கூப்பிடுவேனா? இன்னது செய்வது என்பதை அறியேன்.

மெய்ப்பாடு

தலைவனுடைய பிரிவினைப் பொறுத்துக் கொள்ள முடியாததாலும் கணவனுடன் சேர்ந்து இன்பம் துய்க்க முடியாததாலும் வருத்தமுற்ற தலைவி தனக்குள் ஏற்பட்ட காம நோயின் கொடுமையை அறியாமல் ஊர் மக்கள் உறங்குகின்றனரே அவர்களிடம் எப்படி என் நிலையை அறிவிப்பேன்? தாக்குவேனா? அல்லது கத்துவேனா எனக் கோபம் கொள்கிறாள். அந்தக் கோபத்திற்குப் பின்னால் அழுகை ஏற்படுகிறது. இழவினாலும் வறுமையினாலும் இப்பாடலில் அவலம் ஏற்படுகிறது.

உளவியல் கருத்து

மகிழ்ச்சியைப் பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் சராசரி பெண்ணாக தலைவி படைக்கப்பட்டுள்ளாள். தனக்குக் கிடைக்காத இன்பம் பிறர்க்குக் கிடைக்கின்றதே என்ற வெறுப்புணர்ச்சியும் ஊர் மக்களின் உதவி தனக்குக் கிடைக்குமா என்கின்ற ஆதங்கமும் படப்படப்பும் அவருடைய வார்த்தைகளில் இருந்து தெரிய வருகிறது.

## *5.நோயின் கொடுமை*

“இடிக்கும்கேளிர்! நும் குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
ஞாயிறு காயும் வெவ் அறை மருங்கில்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே” [11]

திணை: குறிஞ்சி பாடியவர்: வெள்ளிவீதியார்

கூற்று: தவைவன் கூற்று

உரை

என்னைக் கடிந்துரைக்கும் நண்பனே! என்னுடைய குறையாக நீ கருதும் என் காம நோயை என்னால் தடுத்து நிறுத்த முடிந்தால் மிகவும் நன்றுதான். அதுவே என் விருப்பமும் ஆகும். கதிரவனின் வெயிலடிக்கும் நேரத்தில் வெம்மையான பாறையிடத்தே கையில்லாத ஊமையொருவன் கண்ணால் பாதுகாக்க முயலும்போது , உருகிய வெண்ணெயைப் போல் இந்தக் காமநோய் என்னிடம் பரவியுள்ளது. அது பொறுத்துக் கொள்வதற்கு அரிதாக இருக்கின்றது.

மெய்ப்பாடு:

தனக்கு நேர்ந்த காம நோயின் தன்மை குறித்துப் பாங்கனுக்கு தலைவன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. கதிரவனின் சுட்டெரிக்கும் தன்மையினாலே வெப்பம் ஏறிய பாறையின் ஒரு புறத்திலே இருக்கும் வெண்ணெய் யாருக்கும் பயனில்லாமல் உருகி அழிவதைப் போல காமநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் தன் உடலில் உள்ள உயிரும் மெல்ல

அழிகின்றதே என தலைவன் வருந்துவதாக அமைந்துள்ளது. இப்பாடலில் வறுமை காரணமாக அவலம் ஏற்படுகின்றது.

உளவியல் கருத்து

தலைவி மேல் தலைவன் கொண்டிருக்கும் தீராக் காதல் புலப்படுகிறது. தன்னுடைய பிரிவு நோயை நீக்க முடிந்த அளவு உதவிப் புரிவாயாக என நண்பனிடம் கூறுவதும் வெளிப்படுகிறது.

### *6. பயன்படா அழகு*

“கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
திதலை அல்குலென் மாமைக்கவினே” [12]

திணை: பாலை பாடியவர்: வெள்ளிவீதியார்

கூற்று : தலைவி கூற்று

உரை

பசுவின் பாலானது கன்றுக்கும் சேராது கலத்திலும் சேராது வீணாக தரையில் சிந்தி பாழாவதைப் போல் தன்னுடைய மேனி அழகானது தனக்கும் பயன்படாது தன் தலைவருக்கும் பயன்படாது குறைந்து, இடையின் நிறம் வெளிறி பசலை நோய்க்கு உணவாகிப் போனதே என தலைவி அவலிக்கிறாள்.

மெய்ப்பாடு:

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது எனத் தொடங்கும் பாடலில் இழவு மற்றும் அசைவு காரணமாக அவலம் ஏற்படுகின்றது.

உளவியல் கருத்து

தலைவனின் பிரிவுத்துயர் ஒருபுறம் இருந்தாலும் மேனி அழகு கெட்டுப் போகின்றதே என்ற கவலையே தலைவியிடம் மேலோங்கி நிற்கின்றது.

### *7. கணவனே உயிர்*

“வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என
நமக்கு உரைத்தோரும் தாமே

அழால் தோழி அழுங்குவர் செலவே” 13

திணை: பாலை பாடியவர்: பெருங்கடுங்கோ

கூற்று : தலைவி கூற்று

உரை

பொருளீற்றும் வினைதான் ஆண்களுக்கு உயிர் என்றும் பெண்களுக்கோ அவர்களது கணவனே உயிர் என்றும் சொன்னவர் ஆயிற்றே. அழாதே தோழி! அவர் உன்னை விட்டுப் பிரிந்து செல்ல மாட்டார் என தோழி கூறினாள்.

மெய்ப்பாடு:

அழாதே என்று தலைவியிடம் தோழி கூறுவதிலிருந்து நல்ல நிலையிலிருந்த கண்கள் பொலிவிழந்து காணப்படுகிறது என்ற குறிப்பு வருவதால் தளர்ச்சி அதாவது முன்பு இருந்த நிலை கெடுதல் என்ற பொருளைத் தரும் அசைவு என்னும் காரணத்தால் அவலம் ஏற்படுகிறது.

உளவியல் கருத்து

பிரிவுத் துயரினால் வருந்தினாலும் தலைவன் நிச்சயம் திரும்ப வருவான் என்ற அதீத நம்பிக்கையை இப்பாடல் காட்டுகிறது. காதலின் வலிமை நம்பிக்கையே என்ற கருத்து கூறப்படுகிறது.

### *8. மெலிவிற்கான காரணம்*

“யாவதும் அறிகிலர் கழறுவோரே

தாய்இல் முட்டை போல உட்கிடந்து
சாயின் அல்லது பிறிதுஎவன் உடைத்தோ
யாமைப் பார்ப்பின் அன்ன
காமம் காதலர் கையற விடினே” 14

திணை: குறிஞ்சி பாடியவர்: கிள்ளி மங்கலங்கிழார்

கூற்று : தலைவி கூற்று

உரை

தாய் முகம் நோக்கி வளரும் தன்மையுடைய ஆமையின் பார்ப்பைப் போல தலைவரைக் காணும்போது வளரும் தன்மையுடைய காமமானது அவர் நம்மைப் பிரிந்து சென்று விட்டால் தாயில்லாத முட்டை மண்ணுள் கிடந்தே மாய்வது போல காமமானது உள்ளத்துக்குள்ளேயே இருந்து என்னை மெலிவடையச் செய்யும். என்னை இடித்துரைப்போர் அது பற்றி சிறிதும் அறிய மாட்டார்கள்.

மெய்ப்பாடு:

குறுந்தொகையில் இடம்பெறும் கிள்ளி மங்கலங்கிழாரது பாடலில் தலைவனின் பிரிவு, மெலிவு, தலைவனோடு சேராமை ஆகியன முறையே இழவு, அசைவு, வறுமை ஆகிய மூன்று காரணங்களால் அவலம் ஏற்படுகின்றது.

உளவியல் கருத்து

தலைவனின்றி தனக்கு இயக்கம் இல்லை என்ற தலைவியின் நிலை புலப்படுகிறது. மணம் முடிந்து தலைவன் தலைவி இருவரும் உடனிருந்து வாழ்வதே முழுமையான வாழ்க்கை என்ற சிந்தனையும் வெளிப்படுகிறது.

9. பாறையில் மோதும் நுரை

"காமந்தாங்குமதி என்போர் தாமஃது
அறியலர் கொல்லோ அனைமதுகையர் கொல்
யாம் எம் காதலர்க் காணேமாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமோடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லாகுதுமே" [15]

திணை: நெய்தல் பாடியவர்: கல்பொரு சிறு நுரையார்

கூற்று : தலைவி கூற்று

உரை

காம நோயைப் பொறுத்துக்கொள் என்று கூறுபவர்கள் அக்காமத்தின் தன்மையை அறியாதிருக்கிறார்களோ? அல்லது அவ்வளவு மனவலிமை உடையவர்களோ? எம் தலைவரைக் காணாவிட்டால் மிகுந்த துன்பம் நிறைந்த நெஞ்சமானது பாறையின் மீது மோதும் நுரையைப் போல் மெல்ல மெல்ல அழிந்து போகும்.

மெய்ப்பாடு:

தலைவனது பிரிவை பெரும் இழப்பாகக் கருதி அவ்விழப்பு தரும் துயரைத் தாங்க முடியாமல் தலைவியானவள் அவலிப்பதாகக் கூறுகிறார். இப்பாடலில் இழவு மற்றும் வறுமை காரணமாக அவலம் ஏற்படுகிறது.

உளவியல் கருத்து

மானிட வாழ்க்கை நீர்க்குமிழியின் வாழ்வுக்கு ஒப்பாக இருக்கிறது. தலைவனைக் காணாவிட்டால் அழிந்து போவது உறுதி என்ற கருத்தை அகக்கருத்தாகவும் ஆன்மீகக்கருத்தாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

முடிவுரை

சங்க இலக்கியப் பாடல்களானது வாழ்வியல் உண்மையை உலகறியச் செய்யும் பெரும்பணியை மேற்கொண்டு வருகின்றன. நிலையாமையை உணர்த்தும் அவலப்பாடல்களானது இழிவினாலும், அசைவினாலும் (தளர்ச்சி). இழத்தலினாலும் (இழவு), வறுமையினாலும் அழுகை ஏற்படும் என தொல்காப்பியர் நான்கு காரணங்களைக் கூறியிருந்தாலும் அவற்றுள் அதிகளவு அசைவு மற்றும் வறுமை காரணமாக அழுகை என்னும் அவல மெய்ப்பாடு தோன்றுகிறது. அவல மெய்ப்பாடு தோன்றும் பாடல்களில் உளவியல் கருத்தாக கணவனே கண்கண்ட தெய்வம் என்கின்ற நிலையில் தலைவி செயல்படுவதையும் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற குணங்களின் திணிப்பு மிகுந்த காலத்திலும் தைரியமாக சில பாடல்களின் வாயிலாக போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம் என்பதை உணர்த்தும் வறுமையைக் கூறுவதையும் காண முடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம், ப.337
2. ஆசிரியர் குழு, நர்மதாவின் தமிழகராதி, ப.764
3. க.வெள்ளைவாரணன் (உ.ஆ.), தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம், ப.5
4. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), தொல்காப்பியம் மூலமும் உரையும், ப.338
5. ஆசிரியர் குழு, நர்மதாவின் தமிழ் அகராதி, ப.59
6. க. வெள்ளைவாரணன், தொல்காப்பிய உரைவளம், ப.42
7. மு.சண்முகம்பிள்ளை (ப.ஆ.), குறுந்தொகை, பா.எ.6
8. மேலது, பா.எ.4

9. முனைவர் வி. நாகராசன் (உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், பா.எ.24
10. மேலது, பா.எ.28
11. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), குறுந்தொகை, பா.எ.58
12. முனைவர் வி.நாகராசன் (உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், பா.எ.27
13. மேலது, பா.எ.135
14. மேலது, பா.எ.152
15. மேலது, பா.எ.290

துணைநூற்பட்டியல்


1. ஆசிரியர் குழு, நர்மதாவின் தமிழ் அகராதி, நர்மதா பதிப்பகம், சென்னை-17
2. சண்முகம் பிள்ளை மு. (ப.ஆ.), குறுந்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1985.
3. சோமசுந்தரனார் பொ.வே. (உ.ஆ.), அகநானூறு (களிற்றுயானைநிரை), சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, மறுபதிப்பு 1973
4. நாகராசன் வி.( உ.ஆ.), குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சூரி புக் ஹவுஸ், சென்னை 600 098, முதல் பதிப்பு 2004 5.
5. பாலசுப்பிரமணியன் கு.வெ. , தொல்காப்பியம் மூலமும் உரையும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் , சென்னை -98
6. வெள்ளைவாரணன் க.(உ.ஆ.), தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21, முதல் பதிப்பு 1986